செய்தி வெளியீடு எண் : 31 நாள் :18.04.2018

***தேனி மாவட்டம்***
***தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் முழு தூய்மை பணிகள்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்***
***தலைமையில் மேற்கொள்ளப்பட்டது:-***

*****

தேனி மாவட்டம், குன்னூர் கிராமத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் சார்பில் கிராம சுயாட்சி பிரச்சாரம் (Gram Swaraj Abiyan) திட்டம் மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (18.04.2018) முழு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

குன்னூர் கிராமத்தில், சீமைக்கருவேல மரங்களை அகற்றும் பணி, வீதிகளில் தூய்மைப்படுத்தும் பணி, கழிவு நீர் வாய்க்கால் தூய்மைப்படுத்தும் பணி, பள்ளி மாணவ, மாணவியர்களைக் கொண்டு நடைபெற்ற மாதிரி கிராம சபைக்கூட்டம், சுகாதாரத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட பணிகள், தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு நாடகங்கள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்து பார்வையிட்டார். மேலும், வீதி, வீதியாக சென்று தூய்மைப்பணிகளை பார்வையிட்டு, பொதுமக்களின் இல்லங்களுக்கு நேரடியாக சென்று தனி நபர் கழிப்பறைகளை தூய்மையாக பயன்படுத்தும் இல்லங்களுக்கு பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும்போது தெரிவிக்கையில், மத்திய, மாநில அரசுகளால் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும், செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் ஆகியவற்றை கிராமங்களில் வசிக்கின்ற பொதுமக்களும் நன்கு தெரிந்திடும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக உயர்த்திடும் வகையில் கிராம சுயாட்சி பிரச்சாரம் (Gram Swaraj Abiyan) திட்டத்தின் கீழ் 14.04.2018 முதல் 05.05.2018 வரையிலான நாட்களில் நடத்திட உத்தரவிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தமிழகத்தில் 1,477 கிராமங்களில் நடைபெற்று வருகிறது. அதன்படி, நமது மாவட்டத்தில் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எண்டப்புளி ஊராட்சிக்குட்பட்ட இ.புதுக்கோட்டை, தேனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டூர் மற்றும் சீலையம்பட்டி, சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அழகாபுரி, ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குன்னூர் மற்றும் தேக்கம்பட்டி ஆகிய 6 கிராமங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கிராம ஊராட்சிகளில் ஒட்டுமொத்த சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளுதல், விழிப்புணர்வு பேரணி மற்றும் வீடு வீடாகச் சென்று தூய்மை இந்தியா திட்டம், திறந்தவெளியில் மலம் கழிப்பதினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கிராம ஊராட்சிகளில் இரட்டை உறிஞ்சிக்குழு உள்ள கழிவறைகளை தன்னார்வலர்கள் மூலம் கட்டுவதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மை என்பது பல இடங்களில் குப்பைகளை சேகரித்து ஒரிடத்தில் கொட்டுவது அல்ல, குப்பை உருவாகின்ற இடத்திலேயே அழிக்கப்படுவதுதான் திடக்கழிவு மேலாண்மை ஆகும்.

பொதுமக்கள் தங்களது இல்லங்கள் மற்றும் பொது இடங்களில் உருவாகும் குப்பைகளை கண்ட இடங்களில் வீசி எறியாமல், மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து பின்னர் தூய்மை காவலர்கள் குப்பை சேகரிக்க வருகின்ற போது வழங்கிட வேண்டும். மக்கும் குப்பைகளை பயன்படுத்தி இயற்கை உரமாகவும், மக்காத குப்பைகள் மூலம் மறு சுழற்சி முறையில் தார் சாலை அமைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தங்களது சுற்றுப்புறச் சூழல்களான நீர், நிலம், காற்று இவற்றை மாசில்லாமல் வைத்திட திடக்கழிவு மேலாண்மையினை நல்ல முறையில் கடைபிடித்திட வேண்டும்.

திறந்தவெளியில் மலம் கழிப்பதினால் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதோடு, தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. அரசு தனிநபர் கழிப்பறை அமைத்திட நிதியுதவியும், இடவசதி இல்லாதவர்களுக்கு பொது கழிப்பறையினை ஏற்படுத்தி தரப்பட்டு உள்ளது. எனவே, பொதுமக்கள் சுற்றுப்புறச் சூழல்களை பாதுகாத்திட திறந்தவெளியில் மலம் கழிப்பதை தவிர்த்திட வேண்டும். கிராம சபைக்கூட்டங்கள் கிராமப்புற பொதுமக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர், மின்சாரம், சாலை வசதி போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவதற்காகவே நடத்தப்படுகிறது. எனவே, கிராம சபைக்கூட்டங்களில் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி பா.திலகவதி அவர்கள், செயற்பொறியாளர் செல்வி கவிதா அவர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி அபிதாஹனீப் அவர்கள், உதவி திட்ட அலுவலர் திரு.தண்டபாணி அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், ஆண்டிபட்டி வட்டார அலுவலர் திரு.எபி அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**